## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006

மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

ந.க.எண்.1342/அ11/ஒபக/பமேகு/2024, நாள்: 19/03/2025

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – பள்ளி அளவில் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை (Id Card) வழங்குதல் மற்றும் தன்முகவரியிட்டக் கடிதத்தாள் (Letter Pad) அச்சடித்தல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** 1. அரசாணை (நிலை) எண்: 144, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள்.28/06/2024.

2. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்ககச் செயல்முறைகள் ந.க.எண். 1342 /A11 / பமேகு / ஒபக / 2024, நாள்: 16.07.2024, 30.07.2024

***********

Padasalai.Net

பார்வை-(1)ன்படி அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் நான்கு கட்டங்களாக பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. பள்ளியின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் முக்கியப் பங்குவகிக்கும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மிகவும் முக்கியமானதாகும். பள்ளியின் தேவைகளின் அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டமானது பள்ளித் தமையாசிரியர்களின் சீரிய முயற்சியால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. மேலும், பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை மற்றும் தன்முகவரியிட்டக் கடிதத்தாள் வழங்குவது தொடர்பாக கீழ்க்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிட அனைத்து வகை அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) அனைத்து வகைப அரசுப் பள்ளிகளில் 2024–2026 ஆண்டுகளுக்கான தெரிவுசெய்யப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையினை (Id Card) பள்ளியளவில் தயார்செய்து வழங்கிட வேண்டும். அடையாள அட்டை மாதிரி இணைப்பு–I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2) பள்ளி மேலாண்மைக் குழுவிற்கான தன்முகவரியிட்டக் கடிதத்தாள் (Letter Pad) பள்ளியளவிலேயே அச்சடித்துப் பயன்படுத்திட வேண்டும். Letter Pad மாதிரி இணைப்பு-II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்காண் நடைமுறைகளைப் பின்பற்றி அடையாள அட்டை மற்றும் தன் முகவரியிட்டக் கடிதத்தாள் (Letter Pad) பள்ளியளவில் அச்சிட்டு வழங்கி பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புடன் செயல்பட அரசுத் தொடக்க/நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. அடையாள அட்டை மாதிரி
2. தன் முகவரியிட்ட கடிதத்தாள் மாதிரி

Link to download templates: https://bit.ly/idcardlrpadtempalate

Scan QR Code to download templates:

Padasalai.Net

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

19/3/2025

பெறுநர்: மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(அனைத்து மாவட்டங்கள்)

நகல்:

(1) மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6
(2) இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6
(3) இயக்குநர், தொடக்கக் கல்வி, சென்னை–6

இணைப்பு-I: அடையாள அட்டை மாதிரி

பள்ளிக் கல்வித் துறை

## பள்ளி மேலாண்மைக் குழு

2024 - 2026

**பள்ளியின் பெயர் :** ................................................................

**முகவரி :** ................................................................

Padasalai.Net

**பெயர் :** ................................................................

**பொறுப்பு :** ................................................................

**தலைவர்** **தலைமையாசிரியர்**

நம் பள்ளி நம் பெருமை

இணைப்பு-II: தன் முகவரியிட்ட கடிதத்தாள் மாதிரி

பள்ளிக் கல்வித் துறை

# பள்ளி மேலாண்மைக் குழு

நம் பள்ளி நம் பெருமை

பள்ளியின் பெயர் மற்றும் முகவரி : UDISE எண் :

தேதி : ____________

தலைவர் :

____________

துணைத் தலைவர் :

____________

தலைமையாசிரியர் :

____________

<u>உறுப்பினர்கள்</u>

பெற்றோர் உறுப்பினர்கள் :

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________
7. ____________
8. ____________
9. ____________
10. ____________
11. ____________
12. ____________
13. சுய உதவிக் குழு உறுப்பினர் (பெற்றோர்)

____________

முன்னாள் மாணவர் (பெற்றோர்கள்)

1. ____________
2. ____________
3. ____________

முன்னாள் மாணவர் (பொது)

____________

ஆசிரியர் பிரதிநிதி :

____________

கல்வியாளர் :

____________

உள்ளாட்சிப் பிரதிநிதிகள் :

1. ____________
2. ____________

Padasalai.Net